பயணிகளுக்கு பயனுள்ள அதிக தகவல்களை தெரிவிக்க

# மெட்ரோ ரெயில்களில் எல்.இ.டி. பலகை பொருத்த திட்டம்

## அதிகாரிகள் நடவடிக்கை

சென்னை, ஜூலை.8-

பயணிகளுக்கு பயனுள்ள வகையில் அதிக தகவல்களை தெரிவிக்க அனைத்து மெட்ரோ ரெயில்களிலும் எல்.இ.டி. தகவல் பலகை இந்த ஆண்டு இறுதிக்குள் பொருத்த அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

### மெட்ரோ ரெயில் சேவை

சென்னை மாநகரில் 2 வழித்தடங்களில் 52 ரெயில்கள் மூலம் 55 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் போக்குவரத்து நடந்து வருகிறது. பயணிகளுக்கு விரைவாகவும், பாதுகாப்பாகவும், சொகுசு பயணத்தையும் அளித்து வருகிறது.

கொரோனா வைரஸ் பரவுவதற்கு முன்பாக சராசரியாக ஒரு நாளைக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் பேர் பயணம் செய்தனர். ஆனால் தற்போது அந்த அளவு பயணிகள் வராவிட்டாலும் ஊரடங்கு தளர்வுகளுக்கு பிறகு அரசு விதித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி பாதுகாப்பான பயணத்தை மெட்ரோ ரெயில் நிறுவனம் அளித்து வருகிறது.

ரெயில் நிலையங்களுக்கு வரும் பயணிகளுக்கு உடல் வெப்பம் பரிசோதிக்கப்படுவதுடன், கைகளை சுத்தம் செய்ய கிருமி நாசினியும் வழங்கப்படுகிறது. சமூக இடைவெளியை பின்பற்றி போக்குவரத்து நடந்து வருகிறது. அத்துடன் பயணிகளுக்கான டிக்கெட்டை கவுண்ட்டரில் பெறுவதற்கு பதிலாக கியூ-ஆர் குறியீடு, பயண அட்டை போன்றவற்றை அறிமுகம் செய்து நோய் பரவலை தடுத்து வருகிறது.

### எல்.இ.டி. பலகை

மெட்ரோ ரெயில்களில் தற்போது வாசல்களின் மேல் பகுதியில் உள்ள வழித்தட வரைப்படத்தில் அடுத்து வரும் ரெயில் நிலையத்தின் பெயரில் உள்ள பச்சை விளக்கு அணைந்து, அணைந்து எரியும். அப்போது நாம் அடுத்து வரும் ரெயில் நிலையத்தை இதனை பார்த்து தெரிந்து கொள்ள முடியும். தற்போது இந்த முறையை மாற்றி விட்டு எல்.இ.டி. பலகை பொருத்த மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

இதன் மூலம் அடுத்து வரும் ரெயில் நிலையங்களை அறிந்து கொள்வதுடன், அந்த ரெயில் நிலையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், குறிப்பாக ஷேர் ஆட்டோ வசதி, கார், மோட்டார் சைக்கிள் வாடகைக்கு விடும் வசதி, அத்துடன் ரெயில் நிலையம் அருகில் உள்ள புகழ்பெற்ற இடங்கள் குறித்த தகவல்களையும் பயணிகளுக்கு வழங்கும். இது பயணிகளுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும். சென்னையில் தற்போது 52 ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.

### ஆண்டு இறுதிக்குள் முடியும்

மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியபோது வாங்கப்பட்ட ரெயில்களில் விரிவாக்கம் செய்யப்பட்ட வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரை உள்ள ரெயில் நிலையங்கள் குறித்த தகவல்கள் இடம்பெறவில்லை. ஆனால் தற்போது பொருத்தப்படும் எல்.இ.டி. பலகைகளில் அனைத்து ரெயில்களிலும் அனைத்து ரெயில் நிலையங்களும் இடம்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

அனைத்து ரெயில்களிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் பயணிகளுக்கு பயனுள்ள தகவல்கள் அடங்கிய எல்.இ.டி. பலகை பொறுத்தப்பட உள்ளது. இதுதொடர்பாக ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

மேற்கண்ட தகவல்களை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.